**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2019**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.09.2025 | தகப்பனார் பெயர்: | கோவிந்தராஜ் |
| பெயர்: | ராஜாராம்<br>(DW–1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வில்வராயன் நத்தம் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 66/2025 |

**முதல் விசாரணை : 01.09.2025**

நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 23.11.1996 தேதியிட்ட எனது தாயார் செல்லம்மாள் பெயரிலான நத்தம் நிலவரித்திட்ட தோராய பட்ட அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்

2. 23.08.2000 தேதியிட்ட எனது தாயார் செல்லம்மாள் பெயரிலான நில ஒப்படைவு உத்தரவின் நமூனா அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும்

3. 05.10.2005 முதல் 10.05.2019 வரையிலான எனது தாயார் செல்லம்மாள் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் (எண்ணிக்கை 5) **பி.வா.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.